முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

E.A. 1/2025

in

EP 14/2018

in

OS 226/2013

தேதி : 08–07–2026

(எ.ம.சா.1) – திரு.முஜீபுர் ரகுமான்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கூல்டிரிங்ஸ் கடை வைத்துள்ளேன். எத்தனை ஆண்டாக இந்த தொழில் செய்கிறேன் என்றால் 7 ஆண்டாக. அதற்கு முன்பாக என்ன தொழில் செய்தேன் என்றால் பஞ்சர் கடை. எங்கு வைத்திருந்தேன் என்றால் திருஆவினன் குடி அருகில். மரகதத்தை எத்தனை ஆண்டாக எப்படி தெரியும் என்றால் சுமார் 20 ஆண்டாக அவர் கோவிலுக்கு வருவதன்மூலம் தெரியும். அவரின் குடும்ப விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் இம்மனு 2009ம் ஆண்டு ஆவணப்படி தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் மரகதத்திற்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 48 இருக்கும். தற்போது அவர் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். எப்போது இறந்தார் என்றால் சுமார் 7, 8 ஆண்டுகள் இருக்கும். எந்த ஆண்டில் மரகதம் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2013ல். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது வழக்கு சொத்தில் எந்தவொரு வில்லங்கமும் இல்லை என்றால் சரிதான்.

2. OS 86/2014ன் வழக்கில் தீர்ப்பு பெற்று மனுதாரர் வழக்கு சொத்தை 21.08.2014ல் கிரையம் வாங்கிய அனுபவத்தில் உள்ளார் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்யும்போது அப்படி கிடையாது. மனுதாரர் தாக்கல்செய்த வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் தாக்க்ல செய்த வழக்கும் நிலுவையில் இருந்தது என்றால் நான்

தாக்கல் செய்த வழக்கு 2013 நிலுவையில் இருந்தது, மனுதாரர் தாக்கல் செய்த வழக்கை பற்றி தெரியாது. நான் சொல்வது தவறு என்றும், மனுதாரரின் வழக்கை பற்றி தெரியும் என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்தை பொறுத்து ஒரு ராஜேஸ்வரி என்பவர் OS 206/2012 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் அப்போது தெரியாது, பின்னர் இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞரிடம் பேசும்போது சுமார் 2 ஆண்டுக்கு முன்பு தெரிந்து கொண்டேன். நானும், ராஜேஸ்வரி என்பவரும் சேர்ந்து வழகசு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் உண்மைக்கு மாறாக 2 வெவ்வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ராஜேஸ்வரி தாக்கல் செய்த நிறைவேற்று மனு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நிறைவேற்று மனுவில் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே இம்மனு அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்./– K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.